විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No.: ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல. 02/2022

ඔබේ අංකය / உமது இல. / Your No.: ..........................

දිනය / திகதி / Date: 2022.04.22

அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,

**<u>ஓய்வூதிய கோவை தொலைந்து போகும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவிற்கான தற்காலிக் கோவையினை தயாரித்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பான என்னால் வெளியிடப்பட்ட 2001.12.20 ஆந் திகதிய 13/2001 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் அறிவுத்தல்களின் பால் தங்கள் அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் மூலம் ஓய்வூதிய கோவை காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் தற்காலிக கோவையொன்றினை தாயாரித்து ஓய்வூதிய கொடுப்பனவினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவ் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தற்காலிக கோவை தயாரிக்கப்படாமல் இதுவரை ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக 2022.02.25 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட செயலாளர்களின் மாநாட்டில் மாவட்ட செயலாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

03. அதன்படி, தற்சமயம் ஓய்வூதியக் கோவை இல்லாமல் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் ஓய்வூதியர்களிடமிருந்து இறுதியாக பணியாற்றிய நிறுவனத்திலிருந்து ஓய்வூதியக் கோவைக்கு தேவையான பின்வரும் ஆவணங்களை 03 மாத காலத்தினுள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்படும் என்பதை ஓய்வூதியர்களுக்கு அறிவுறுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

a. i. ஓய்வூதியக் கொடைப் பத்திரம்
அல்லது

b. i. நியமனக் கடிதம்
ii. ஓய்வு பெற்ற கடிதம்
iii. வரலாற்றுத் தாள்

**ஒப்பம்./ ஏ. ஜகத் டீ. டயஸ்**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்
1. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு -த.த.த.
2. கணக்காய்வாளர் நாயகம் -த.த.த.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk